# செவ்வேள்

**எம். துர்கா**
விரிவுரையாளர், அரசு ஆண்கள் கலைக்கல்லூரி,
கிருஷ்ணகிரி.

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

பாட்டும் தொகையும்' என்பது சங்க இலக்கியமாகும். இப்பகுப்பினும் தொகுக்கப்பட்டுள்ள அகமும் புறமும் சார்ந்த நூல் பரிபாடல். இந்நூலை 'ஓங்கு பரிபாடல்' என்று பழம்பாடல் ஒன்று சுட்டுவதிலிருந்து, இதனின் உயர்வை அறிய முடிகிறது. பரியின் பாய்ச்சல் போலச் செல்லும் நடையினை உடையதால் இன்ன பெயர் பெற்றது என்பர் புலவர்.

## பரிபாடல் அமைப்பு

பரிபாடலில் 70 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதில் 22 பாடல்களே கிடைத்துள்ளன. இதனுள் 5,8,9,14,17,18,19,21 ஆகிய எட்டுப்பாடல்களில் அமைந்துள்ள செவ்வேளாகிய முருகனைப் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## பரியும் பண்ணும்

ஒவ்வொரு பாடலின் கீழும் இசை வகுத்தவர் பற்றிய குறிப்பும் இன்ன பண் என்ற குறிப்பும் உள்ளது. **'இன்னியல் மான்தேர்ச்சி இசைபரிபாடல்'** (பரிபாடல். 11:137) என்று நல்லந்துவணாரும் இதைப் பற்றிக்குறிப்பிடுகிறார். திருந்துமொழிப்புலவர் அருந்தமிழ் ஆய்ந்த சங்கம் என்னும் துங்கமலி கடலுள் அரிதின் எழுந்த பரிபாட்டமுதம்' என்கிறது உரைச்சிறப்புப்பாயிரம். செவ்வேளைப்பற்றி கடுவன் இளவெயினனார், நல்லந்துவனார், குன்றம்பூதனார், கேசவனார், நல்லழிசியார், நப்பண்ணனார், நல்லச்சுதனார் ஆகியோர் பாடியுள்ளனர்.

தெய்வநம்பிக்கை என்பது மக்கள் சமுதாயத்தை நேரிய வழிமுறையில் கொண்டு செல்வதாகும். தெய்வவழிபாடு அச்சஉணர்வின் காரணமாகவே பின்பற்றப்பட்டு வருவதை அறியலாம். தொல்காப்பியர் காலத்தில் குறிஞ்சிநிலத் தெய்வமாக இருந்த சேயோன் சங்ககாலத்தில் நிலம் கடந்த பெருங்கடவுளாக அனைவராலும் போற்றப்பெற்றார்.

## செவ்வேளின் பிறப்பு

**'நொசிப்பின், ஏழ்உறுமுனிவர் நனி உணர்ந்து,**
**வசித்ததைக் கண்டம் ஆக மாதவர்**
**மனைவியர், நிறையின் வசிதடி சமைப்பின்**
**சாலார் தாகே தரிசிக்க என அவர்அளி**
**உடன் பெய்தோரே, அழல்வேட்டு அச்சுளித்**
**தடவு நிமிரி முத்தீப் பேணிய மன் எச்சில்**

**வடவயின் விளங்குஆல் உறைஏழு மகளிருள்**
**கடவுள் ஒரு மீன் சாலினி ஒழிய**
**அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர்**
**மறுஅறு கற்பின் மாதவர் மனைவியர்**
**நிறைவயின் வழாஅது நிற் சூலினரே**
**நிவந்து ஓங்கு, இமயத்து நீலுப் பைஞ்சுனைப்**
**பயந்தோர் என்ப, பதுமத்துப் பாயல்**
**பெரும் பெயர் முருக! நிற்பயந்த ஞான்றே**
**அரிது அமர் சிறப்பின் அமரர் செல்வன்**
**எரிஉமிழ் வச்சிரம் கொண்டு இகந்து வந்து எறிந்தென**
**ஆறு வேறு துணியும் அறுவர் ஆகி**
**ஒருவனை வாழி' (பரிபாடல் 5:37-54)**

என்னும் அடிகளால் செவ்வேளின் பிறப்பு உணர்த்தப்படுகிறது. இந்திரன் சிவனிடம் வரம் கேட்க, சிவன் தனது கருவின் உருவினைச் சிதைத்துப் பல துண்டுகளாக்கி இந்திரன் கையில் கொடுத்தான். இந்திரனிடமிருந்து சிதைந்த கருவினை ஏழு முனிவர்கள் பெற்றுக் கொண்டனர். அவர்களின் தவவலிமையினால் வேள்வித்தீயில் இட்டனர். அவிப்பாகத்துடன் சேர்ந்த எச்சிலாகிய அவற்றை வானின் வடதிசையில் உறையும் ஏழுமகளிருள் அருந்ததி தவிர அனைவரும் அப்பொழுதே உண்டு ஆறுகுழந்தைகளைப் பெற்றெடுத்தனர். இதனையறிந்த இந்திரன் தனது வச்சிரப்படையால் குழந்தைகளை வெட்ட ஆறும் ஒரேஉருவமாக (செவ்வேளாக)த் தோன்றியது.

**செவ்வேளின் புனைவு**

**'மலையாற்றுப் படுத்த மூவிரு கயந்தலை**
**மூவிறு கயந்தலை, முந்நான்கு முழவுத்தோள்**
**ஞாயிற்றேர் நிறத்தகை' (பரிபாடல் 5:10-12)**

கடுவனிளவெயினனார், ஆறு மெல்லிய தலைகளையும் பன்னிரெண்டு மத்தளம் போன்ற தோள்களையும் இளங்கதிரவன் போன்ற நிறஅழகையும் உடையவன் "செவ்வேள்" என புனைந்துள்ளார்.

**செவ்வேளின் உருவம்**

**'ஊர்ந்ததை எரிபுரை ஓடைஇடை இமைக்கும் சென்னிப்**
**பொருசமம் கடந்த புகழ்சால் வேழம் சருமத்தின்**
**தொட்டதை, தைப்பமை தாள் இயை தாமரை**
**துப்பமை துவர்நீத் துறைமறை அழுத்திய**
**வெரி நத்தோலெடு முழுமயிர் மிடைந்த**
**வரிமலி அரவுரி வன்பு கண்டன்ன**
**புரிமென் பிலிப் பொழ்வுடினை அடையல்**
**கையதை கொள்ளாத் தெவ்வர்கொள் மாமுதல் தடிந்து**
**புள்ளோடு சுருளுடை வள்ளி கிடையிடுபு இழைத்த**
**உருள் இணர்க் கடம்பின் ஒன்றுபடக் கமழ்தார்' (பரிபாடல். 21:1-11)**

விளக்கத்தால் தீப்போல ஒளிரும் முகபடாம் மத்தகத்திடையே பொலியப் போர்க்களத்தில் பகைவரை வென்ற புகழ்மிக்க பிணிமுகம் என்னும் யானையை ஊர்தியாகக் கொண்டுள்ளாய். பவழம் போன்ற துவர் நீர்த்துறையில் நன்றாக ஊறவைத்த தாமரைத்தோலால் தைக்கப்பெற்ற செருப்பைத் திருவடிகளின் நிறத்திற்கேற்ப அணிந்துள்ளாய். அவுணர்களின் அரணான மாமரத்தை அழித்து, கிரௌஞ்சமலையைப் பிளந்து, கடப்பமாலைத்தரித்த வேலைக் கையில் தாங்கியுள்ளாய் என்று நல்லந்துவனார் எடுத்தோதியுள்ளார்.

**செவ்வேளின் வீரம்**

செவ்வேளுடன் போரிட்டுத் தோற்ற இந்திரன் மயிலையும் அக்கினித்தேவன் சேவற்கொடியையும் திறைப்பெருளாக அளித்தனர். எமன் வெள்ளாட்டுக்குட்டியை வழங்கினான்.

**‘ஆரா உடம்பின் நீ அமர்ந்து விளையாடிய**
**போரால் வறுங்கைக்கும் புரந்தரன் உடைய**
**அல்லல் இல் அனலன் தன் மெய்யிற் பிரித்துச்**
**செல்வ வாரணம் கொடுத்தோன் வானத்து**
**வளங்கெழு செல்வன் தன் மெய்யிற் பிரித்துத்**
**திகழ்பொறிப் பீலி அணிமயில் கொடுத்தோன்**
**திருந்து கோல் ஓமன் தன் மெய்யிற் பிரிவித்து**
**இருங்கண் வெள்யாட்டு எழில்மறி கொடுத்தோன்**
**ஆஅங்கு, அவரும் பிறரும் அமர்ந்து படையளித்த**
**மறியும் மஞ்சையும் வாரணச் சேவலும்**
**பொறிவரிச் சாபமும் மரனும் வாளும்**
**வெறியிலை ஈட்டியும் குடாரியும் கணிச்சியும்**
**தெறுகதிர்க் கனலியும் மாலையும் கைக்கொண்டு**
**வேறுவேறு உருவின் இவ்வாறு இருகைக் கொண்டு’**

(பரிபாடல் பா.5:55-68)

என ஆட்டுக்குட்டி, மயில், ஈட்டி, கோடாரி, கணிச்சி, மழு, மாலை, மணி ஆகியன போன்ற படைக்கருவிகளைப் பன்னிருகைகளில் தாங்கி, செவ்வேள் வீரத்துடன் காட்சியளிக்கிறான்.

**செவ்வேள் அன்பர்கள்**

**‘யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருள் இணர்க் கடம்பின் ஒலிதாரோயே’**

(பரிபாடல் பா.5:78-81)

என வேண்டுகின்றனர். மேலும்

**‘சட்டியில் இருந்தால் அகப்பையிலே வரும்’ என்பது பழமொழி.**
**‘கருவயிறு உருக எனக் கடம்படுவோரும்**
**செய்பொருள் வாய்க்க எனச் செவி சார்ந்து வோரும்**
**ஐ அமர் அடுக என அருச்சிப்போரும்’**

(பரிபாடல் 8:106-108)

என கர்ப்பம் வேண்டியும், நிறைய பொருள் வேண்டியும் செவ்வேளை வணங்குகின்றனர்.

**செவ்வேளின் அருள்**

**‘நின்அடி உறை உரிதினின் உறை பதிச் சேர்ந்தாங்கு**
**பிரியாது இருக்க – எம் சுற்றமொடு உடனே’**

(பரிபாடல் 18:54-56)

உன்னை வணங்கும் எனக்கும் எனது சுற்றத்தாருக்கும் பிறவித்துன்பம் சாராதவாறு இன்பம் நிறைந்த நாளைப்பெற நீ அருளவேண்டும் என்று செவ்வேளை வழிபடுகின்றனர்.

பரிபாடல் திருப்பரங்குன்றத்து முருகனைப்பற்றிமட்டும் பாடுகிறது. முருகனின் பிறப்பு செவ்வேள் தாமரையில் அவதரித்தல் (8), தமிழநாய்தல் (9) அழகு, வேற்படை, கொடி, ஊர்தி முதலான செய்திகளை எட்டுப்பாடல்களில் கூறுகிறது. முருகனுக்கு யார்? யார்? படைக்கருவிகளை வழங்கினார்கள் என்ற செய்தி பரிபாடலில் மட்டுமே காணப்படுகிறது. முருகனின் பக்தர்கள் அவர்கள் வேண்டும் வரங்கள், முருகனின் அருள், முக்தி ஆகிய செய்திகளும் இடம்பெறுகின்றன.